International Journal of Linguistics and Computational Applications (IJLCA) ISSN 2394-6385 (Print)
Volume 5, Issue 4, October - December 2018 ISSN 2394-6393 (Online)

# சங்க இலக்கிய ஆற்றுப்படை நூல்களில் திருக்குறள்

**முனைவர் கி. சங்கர நாராயணன்**

உதவிப் பேராசிரியர், தமிழ்மேம்பாட்டுச் சங்கப்பலகைத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம்

மெரினா வளாகம், சென்னை – 600005

சங்க இலக்கிய ஆற்றுப்படை நூல்களான திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை,பொருநராற்றுப்படை, மலைபடுகடாம் ஆகிய ஐந்து ஆற்றுப்படை இலக்கியங்களில் காணலாகும் திருக்குறளின் கருத்துக்களை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

---

## 1. திருமுருகாற்றுப்படை:

திருமுருகாற்றுப்படையின் தொடக்கமாக,

**“உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு**
**பலர்புகழ் ஞாயிறு கடல்காண் டாஅங்கு”** (திரு.1-2)(2)

என்றமைகிறது. உலகில் வாழும் உயிர்கள் எல்லாம் மகிழும்படி, மேருவை வலமாக எழுந்து, பற்பல சமயத்தவரும் புகழ்கின்ற ஞாயிறு கீழ்க்கடலிடத்தே எழக் கண்டாற்போன்று, இடையீடு இன்றி எக்காலத்தும் விளங்குவதும் மிக நெடுந் தூரத்தில் விளங்கிப் பிரகாசிப்பதுமாகிய ஒளியினையும், தன்னை வந்து அடைந்த மெய்யடியார்களின் அறியாமையை உடைத்து, அவரை ஆட்கொள்ளும் வலிய திருவடியினையும் பகைவர்களாகிய அசுரர்களை அழித்த இடியினைப் போன்ற ஆற்றல் பெற்ற கையினையும் உடைய, குற்றமற்ற கற்பு வாய்ந்த தெய்வயானையின் தலைவன் ஆகிய முருகன் என நக்கீரர் இயம்புகிறார். இதனையே திருக்குறள்,

**“கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்”** (குறள்.2) (3)

எனத் தொடங்கிக் கடவுள் வாழ்த்தில் எட்டுக் குறட்பாக்களில் இறைவன் திருவடியைப் புகழ்கின்றார்.

திருமுருகாற்றுப்படையில் முனிவர்களது இயல்புகளைச் சொல்லுமிடத்தில், மரவுரியை உடுத்தவர். வலம்புரிச் சங்கை ஒத்த அழகிய நரைமுடியை உடையவர். அழுக்கின்றி விளங்கும் திருமேனியை உடையவர். மானின் தோலைப் போர்த்தவர். சதை வற்றிய மார்பில் விலா எலும்புகள் தோன்றியசையும் உடலை உடையவர். பகற்பொழுதுகள் பலவற்றில் உண்ணும் உணவை நீக்கியவர். புகையைப் போக்கிய மனத்தை உடையவர். கற்றறிந்தவர்க்கும் தாம் எல்லையாகிய தலைமைத் தன்மை உடையவர். ஆசையுடன் கடுங்கோபத்தையும் நீக்கிய அறிவை உடையவர். ஒருவரிடமும் வெறுப்பு இல்லாத மெய்ஞ்ஞானத்தை உடையவர் ஆகிய இவ்வியல்புகள் பொருந்தியர்வகள் முனிவர்கள்.

**“சீரை தைஇய உடுக்கையர், சீரொடு**
**வலம்புரி புரையும் வால்நரை முடியினர்”**(முரு.126-127)(2)

இதனையே வள்ளுவர் முனிவர்கள் உடலைப் பொருளாகக் கொண்டு பேணாது தம் தவத்திற்குக் கருவியாகும் அளவே அதனைப் போற்றுவர் என்கிறார். இதனைப் பின்வரும் குறள் எடுத்தியம்புகிறது.

**“மற்றுந் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்**
**உற்றார்க்கு உடம்பு மிகை”** (குறள்.345) (3)

காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களின் நாமமும் கெட்ட மெய்க்காட்சியாளர்களாக விளங்குவர் என்கிறார் செந்நாபோதர்.

**“காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**
**நாமம் கெடக்கெடு நோய்”** (குறள்.36)(3)



DOI: 10.30726/ijlca/v5.i4.2018.52015

**2. பொருநராற்றுப்படை:**

கரிகாற் பெருவளத்தானிடம் பரிசு பெற்றோன் பின்வருமாறு பாடுகிறான், "புகழால் மேம்பட்டவனே! கொல்வது போன்ற பசியாலே உன் சுற்றத்தார் பெரிதும் வாடியிருக்கின்றனர். நீயும் நெடுநாட்களாகப் பெரும்பசியால் வாடியிருக்கின்றாய். நீயும் நின் சுற்றத்தினரும் தொன்றுதொட்டு வந்த பெரும் பசியிலிருந்து நீங்குதலை வேண்டின், காலம் நீட்டித்தல் இன்றி உடனே எழுந்து புறப்படுவாயாக! நீ நெடிது வாழ்வாயாக" என்கிறான்.

**"ஆடுபசி உழந்தநின் இரும்பேர் ஒக்கலொடு**
**நீடுபசி ஒராஅல் வேண்டின், நீடுஇன்று**
**ஏழுமதி: வாழி, ஏழின் கிழவ!"** (பொருந.61-63) (2)

பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவை போலப் பரிசிலர் புரவலரை நாடிச் செல்லுதல் இயல்பு. இதனை வள்ளுவர்,

**"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்**
**நயனுடை யான்கட் படின்"** (குறள்.216) (3) என்கிறார்.

கரிகாற்பெருவளத்தானின் விருந்தோம்பல் சிறப்பினைச் சொல்லும்போது, நான் விரும்பிப் பாடத் தொடங்குவதற்கு முன்பே கரிகாற் பெருவளத்தான் எழுந்து வந்தான். தன்னோடு பொருந்திப் பழகிய நண்பரிடம் தன் உறவுடைமைகளைக் காட்டுவது போல் காட்டினான். இனிய முகமன் உரைகள் பல கூறினான். தன் கண்ணினால் நன்கு காணும்படி தனக்கு மிக அண்மையான இடத்தில் என்னை அழைத்து உட்கார வைத்துக் கொண்டான்.

**"….. ஒன்றிய**
**கேளிர் போல, கேள்கொளல் வேண்டி,**
**வேளாண் வாயில் வேட்பக் கூறி"** (பொருந.73-75) (2)

இதனை வள்ளுவர், ஒன்றிய கேளிர் போலக் கெழுதகை நட்பிற்குக் காரணம் உணர்ச்சி ஒன்றுபடுதலே என்கிறார்.

**"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
**நட்பாம் கிழமை தரும்"** (குறள்.785) (3)

கரிகாற் பெருவளத்தானை அரசவைக்குச் சென்று காணும்போது கூறியது, "காலை எழுந்ததும் யான் கரிகால் வளவனைக் காண்பதற்கு முன்னாளின் மாலைக் காலத்தில் என்னிடம் இருந்த வறுமையை எண்ணிப் பார்த்தேன். அவனைக் கண்ட அன்றைய காலையில் என்னைக் கண்டவர், நெருநல் நேற்று வந்தவன் இவல் அல்லன் என்று மனம் மருண்டு கூறுவதற்குக் காரணமான என் பொலிவான நிலையையும் கண்டேன். அன்று விடியலில் நிரம்ப உண்ட கள்ளின் மனம் என்னை விட்டு நீங்காதிருந்தபடியால், வண்டுகள் இடையறாது என்னை மொய்த்துக் கொண்டிருந்தன" என்கிறான் இரவலன்.

**"மாலை அன்னதுஓர் புன்மையும், காலைக்**
**கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையும்**
**கனவுஎன மருண்டஎன் நெஞ்சு ஏமாப்ப"** (பொருந.96-98) (2)

சொல்லிக்காட்டமுடியாத இன்னாமையுடையது தன் நல்குரவு நிலை. நல்குரவின் துன்பத்தை கொடுமையை வேறு உவமை முதலியவற்றால் கூற முடியாது என்பதைப் பின்வரும் குறட்பாக்களில் வள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

**"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது"** (குறள்.1041) (3)

**"நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரம்பினுள்**
**யாதொன்றுங் கண்பா டரிது"** (குறள்.1048) (3)

கரிகாற் பெருவளத்தானின் திருவடி நிழலை அணுகி அவனைத் தொழுது அவன் முன் நிற்பீராயின், அதுகாறும் நும்மைப் பற்றி நின்ற வறுமை நும்பால் இல்லையாகும். கன்றை ஈன்ற பசு கன்றை விரும்பிப் பார்ப்பது போன்று நும்மை ஆர்வத்துடன் நோக்கி, நமது கலையினைத் தான் கேட்டற்கு முன்னரே விரைந்து, கொட்டைப் பாசியின் வேர் போன்று அழுக்கோடு, குறைந்துபோன, தையலையுடைய சிதைந்துபோன நும் ஆடைகளை நீக்கிக் கரையிடத்தே


DOI: 10.30726/ijlca/v5.i4.2018.52015

கொட்டைகள் முடியப் பெற்ற தூய பட்டுடையைக் கொடுத்து உடுக்கச் செய்வான்.

**"……………..பழுதுஇன்று**
**ஈற்றஆ விருப்பின் போற்றுபு நோக்கிநும்**
**கையது கேளா அளவை, ஒய்யென**
**பாசி வேரின் மாசொடு குறைந்த"** (பொருந.151-154) (2)

இதனை வள்ளுவர்,

**"முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்**
**இன்சொ லினதே அறம்"** (குறள்.63) (3) என்கிறார்.

### 3. சிறுபாணாற்றுப்படை

வஞ்சி மாநகரின் சிறப்பினைக் கூறும்போது, கொழுத்த மீன் என அந்நாட்டு நீர் வளத்தைக் குறிப்பிடுகின்றார். சேரர் நாட்டின் செல்வங்களுள் தலை சிறந்தது மிளகு. ஆதலின் அதனை எடுத்துக்காட்டி, சேர நாட்டின் செல்வச்சிறப்பை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். கழுநீர் மலரை மேய்ந்த எருமை, மிளகு படர்ந்த பலா மரத்தின் நிழலில், காட்டு மல்லிகைப் படுக்கையில் மஞ்சல் இலை முதுகு தைவரத் துயிலும் என்பதனால் சேர நாட்டின் நீர்வளம், நிலவளம், கூழின் பெருக்கம், அந்நாட்டில் வாழும் உயிர்கள் எய்தும் இன்பம், இவற்றிற்கு எல்லாம் காரணமான அரசியல் அறம், அதை நிலைநாட்டும் மன்னின் வீரம் ஆகியவனற்றைப் பின்வரும் வரிகள் உணர்த்துகின்றன.

**"கொழுமீன் குறைய ஒதுங்கி, வள்இதழ்க்**
**கழுநீர் மேய்ந்த கடவாள் எருமை**
**பைங்கறி நிவந்த பலவின் நீழல்"** (சிறு.41-43) (2)

இதனை வள்ளுவர்,

**"இயல்புளிக் கோலோச்சு மன்னவன் நாட்ட**
**பெயலும் வினையுளுந் தொக்கு"** (குறள்.545) (3) என்கிறார்.

தன் மனத்து நிகழ்கின்றவற்றை மறையாமல் கூறித் தன்னை நாடி வந்தவர் மனம் மகிழ, அவர் இல்லத்திற்கு இயன்ற பொருள்களைக் குறிப்பறிந்து வழங்கியவனும், மழை வளம் மிக்க நெடிய குவடுகளை உடைய மலைநாட்டை உடையவனும் போர்த்தொழில் வல்லவனும் ஆகியவன் நள்ளி என்னும் வள்ளல்.

**"நட்டோர் உவப்ப, நடைப்பரி காரம்**
**முட்டாது கொடுத்த, முனைவிளங்கு தடக்கை**
**துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு**
**நளிமலை நாடன் நள்ளியும்"** (சிறு.104-107) (2)

முட்டாது கொடுத்தல் என்றது, தன்பால் எய்தியோர் பின்னர் நல்குரவால் நலியாதவாறும், வேறொருவர்பாற் சென்று இரவாதவாறும் நிரம்ப நல்கும் இயல்புடையவன் நள்ளி என்பதைப் பின்வரும் வள்ளுவரின் வரிகளுக்குச் சான்றாகக் கொள்ளலாம்.

**"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
**குலனுடையான் கண்ணே உள"** (குறள்.223) (3)

நல்லியக்கோடனை விரும்பி, எக்காலமும் அவனுடன் நெருங்கி விளங்குகின்ற சான்றோர், அவனுடைய செய்ந்நன்றி அறிதற் சிறப்பையும் சிற்றினஞ் சேராச் சிறப்பையும், இன்முகமுடையனாதாற் சிறப்பையும் அகம், புறம் இரண்டானும் இனியனாம் சிறப்பையும் புகழ்கின்றனர்.

**"செய்ந்நன்றி அறிதலும், சிற்றினம் இன்மையும்,**
**இன்முகம் உடைமையும், இனியன் ஆதலும்,**
**செறிந்துவிளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த**
**அஞ்சினர்க்கு அளித்தலும், வெஞ்சினம் இன்மையும்**
**ஆண்அணி புகுதலும், அழிபடை தாங்கலும்"** (சிறு.207-211) (2).

அறங்களுள் தலையானது செய்ந்நன்றி அறிதலாகும். இவை தான் வள்ளலின் புகழுக்கு மணிமுடியாக விளங்கும் என்பதைக் குறள் விளக்குகிறது.

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு"** (குறள்.110) (3)

இதனையே புறநானூறும் எடுத்தியம்புகிறது.

**"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்**
**மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்**
**குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்**


DOI: 10.30726/ijlca/v5.i4.2018.52015

**வழுவாய் மருங்கிற் கழுவாயும் உளவென**
**நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்"** (புறம். 34) (2)

நல்லியக்கோடன் பகைவரைத் தத்தம் நிலத்தைக் கைவிட்டுப் போகச் செய்த வலிமையும் வெற்றியும் உடையவன். விறல்வேல் மன்னரின் அரண்களை அழித்தவன். தன்னை விரும்பி வந்த பரிசிலர், பாணர் போன்றோரது வறுமையைத் தீர்த்தவன்.

**"திறல்சால் வென்றியோடு தெவ்வுப்புலம் அகற்றி**
**விறல்வேல் மன்னர் மன்எயில் முருக்கி,**
**நயவர் பாணர் புன்கண் தீர்த்தபின்**
**வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு"** (சிறு.246-249) (2)

வேலினால் வெருவந்த செய்யும் வேந்தரது எயிலைக் கொள்ளுதல் சிறந்த அரசனின் கடமையாகும் என்பதை வள்ளுவர் எடுத்துக்காட்டுகிறார்.

**"வேலன்று வென்றி தருவது மன்னவன்**
**கோலதூஉம் கோடா தெனின்"** (குறள்.546) (3)

## 4. பெரும்பாணாற்றுப்படை:

பாணனது வறுமையைக் குறிப்பிடும்போது, ஞாயிறும் திங்களும் வலம் வருகின்ற கடல் சூழ் உலகில், மழை வறண்டமையால் புகை எழுகின்ற மலையின்கண், நின்னைப் புரப்பாரைப் பெறாமையால், பழுத்த மரத்தை நாடித் திரியும் பறவை போன்று, அழுது புலம்பும் சுற்றத்தினருடன் ஓரிடத்து இராமல் பயனின்றி ஓடித் திரிகின்ற பொலிவிழந்த வடிவினையும் கற்ற கல்வியை வெறுத்துப் பேசுகின்ற வாயையும் உடையவன் பாணன்.

**"வெந்ததெறற் கனலியொடு மதிவலம் திரிதரும்**
**தண்கடல் வரைப்பில், தாங்குநர்ப் பெறாது**
**பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்**
**பழுமரம் தேரும் பறவை போல"** (பெரும். 16-19) (2)

இதனை வள்ளுவர்,

**"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**
**நயனுடை யான்கட் படின்"** (குறள்.216) (3)

இதே போன்று பதிவுகளும் பல சங்கப்பாக்களில் காணமுடிகின்றது.

**"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி"** (புறம்.47) (2)

**"கனிபொழி கானம் கிளையொடு உணீஇய**
**துனைபறை நிவக்கும் புள்ளின் மான"** (மலை.54-55) (2)

உழவரின் இல்லங்களில் எருதோடு கூடிய ஆண்கள் ஈன்ற வறைந்த காலையுடைய கன்றுகள் பக்கத்தில் உள்ள முளைகளில் பெரிய கயிற்றினால் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும். ஏணிக்கு எட்டாத நெடிய வடிவினையும் தலையைத் திறந்து சொரியப்பட்ட உணவாகும் பழைய நெல்லையும் உடையவாய்க் கன்னிமையோடு உயர்ந்து நிற்கும் முதிர்ந்த நெற்கூடுகள் அவ்வில்லங்களில் காணப்படும். அவ்வில்லங்களில் தச்சர்களின் பிள்ளைகளும் விரும்பும்படியாகப் புனைந்த நல்ல சிறு தேர்களை உருட்டித் திரிந்த பிள்ளைகள், அங்ஙனம் தளர்நடையிட்டுத் திரிந்த தம் வருத்தம் நீங்கும்படியாக, செவிலித்தாயாரைத் தழுவிப் பாலை உண்டு தமது படுக்கையில் நன்கு துயில் கொள்ளும். பசி, வறுமை என்பதையே அறியாத அசையாத குடியிருப்பினை உடைய வளம் நிறைந்த பெரிய ஊர்களில் தங்குவீராயின் தொழிலில் சோம்பியராத அவ்வுழவர்கள், தம் உழைப்பால் பெற்ற வெண்மை நிற நெற்சோற்றை அவர்தம் மனையிடத்தே வாழும் கோழிப் பெடையினாற் சமைத்த பெரியலோடு பெறுவார்கள.

**"பகட்டுஆ ஈன்ற கொடுநடைக் குழவிக்**
**கவைத்தாம்பு தொடுத்த காழ்ஊன்று அல்குல்**
**ஏணி எய்தா நீள்நெடு மார்பின்**
**முகடு துமித்து அடுக்கிய பழம்பல் உணவின்"** (பெரும்.243-246) (2)

ஒரு கன்னி மணப்பருவம் பெற்றும் கணவனைப் பெறாது வீணே முதியவள் ஆவதைக் குமரி மூத்தல் என்பர். இதனையும் திருக்குறளில் காணமுடிகின்றது.

**"அற்றார்க்கொன்று ஆற்றதான் செல்வம் மிகநலம்**
**பெற்றாள் தமியள்மூத் தற்று"** (குறள்.1007) (3)


DOI: 10.30726/ijlca/v5.i4.2018.52015

### 5. மலைபடுகடாம்:

வழியினது நன்மையின் அளவும் தீமையின் அளவும் நீர் தங்கும் நல்ல இடங்களும் பிறர் நாடுகளில் இல்லாத செல்வத்தை மாறாமல் கொடுக்கும் அவன் நாட்டில் விளைகின்ற உணவுகளும், அவன் நாட்டின் மலைப்பகுதிகளின் தன்மையும், சோலைகளின் தன்மையும் விலங்குகள் விரும்பித் திரியும் காட்டின் தன்மையும் கேளுங்கள் என்று நன்னனது நாட்டின் சிறப்பினை விளக்குகின்றார்.

**“ஆற்றின் அளவும் அசையும் நல் புலமும்**
**வீற்று வளம் சுரக்கும் அவன்நாடு படுவல்சியும்**
**மலையும் சோலையும் மாபுகல் கானமும்**
**தொலையா நல்இசை உலகமொடு நிற்ப”** (மலை.67-70) (2)

நாட்டின் சிறப்பினைக் கூற வந்த வள்ளுவரும்

**“நாடென்ப நாடா வளத்தன நாடல்ல**
**நாட வளந்தரு நாடு”** (குறள்.739)(3) என்கிறார்.

சங்க இலக்கிய ஆற்றுப்படை நூல்களின் கட்டமைப்பில் திருக்குறள் பங்கும் தாக்கமும் உள்ளது என்பதை மேற்காண்ட சான்றுகளின் வழியாகத் தெளிவாக அறிய முடிகின்றது. இன்று எந்த ஒரு பொருண்மை குறித்து நாம் ஆய்வு செய்யத் தொடங்கினாலும் அதற்கான முன்னோடி இலக்கியமாகவும், வழிகாட்டி நூலாகவும் திருக்குறள் திகழுகின்றது. திருக்குறளின் விழுமியங்களைத் திருக்குறளோடு மட்டும் நில்லாமல் அதற்கு பிந்திய இலக்கண, இலக்கிய நூற்கள் காலமாற்றம், வளர்ச்சிக்கு ஏற்ப பதிவு செய்துவருவதும் குறிப்பிடத்தக்கது. இதுவரை எழுந்த இலக்கியங்களானாலும், இனி வரும் காலங்களில் எழப்போகும் இலக்கியங்களானாலும் சரி திருக்குறளை விட்டுத் தனித்தியங்கி, மானிட விழுமியங்களை எடுத்துரைப்பது இயலாத காரியமாகும். சங்க இலக்கியங்களில் திருக்குறளின் விதைகள் பல இடங்களில் விரவியுள்ளன என்பது மறுப்பதற்கில்லை.

### துணைநின்ற நூற்கள்

[1] சிற்பி பாலசுப்பிரமணியன், நீல பத்மநாபன், 2013, புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அகாதெமி, புதுதில்லி.

[2] சுப்பிரமணியன்.ச.வே.சு., 2006, சங்க இலக்கியம் மூலம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

[3] பரிமேலழகர் (உ.ஆ.), 2008 திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், கழகப் பதிப்பு, சென்னை.

.



DOI: **10.30726/ijlca/v5.i4.2018.52015**